தினமணி

**எடப்பாடியில் சிக்கிய மெகா மீன் ஜோடி!**

First Published : 25 Jul 2010 01:39:13 PM IST

எடப்பாடி, ஜூலை 24: சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே உள்ள காவிரி ஆற்றில் 45 கிலோ மற்றும் 42 கிலோ எடையுள்ள ராட்சத கட்லா வகை மீன்கள் சனிக்கிழமை சிக்கின.
÷எடப்பாடி அருகே உள்ள கோனேரிப்பட்டியில் உள்ள காவிரி ஆற்றில் மீனவர்கள் ஏராளமானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மீனவர்கள் சிலர் சனிக்கிழமை மீன் பிடிப்பதற்காக காவிரி ஆற்றுக்குச் சென்றனர். அப்போது மீனவர் கோவிந்தன் என்பவர் வலையில் 45 கிலோ எடையுள்ள பெண் மீனும், 42 கிலோ எடையுள்ள ஆண் மீனும் சிக்கின. வழக்கமாக ஏழு கிலோ வரை மட்டுமே கிடைக்கும் கட்லா வகை மீன்கள் தற்போது 10 கிலோவுக்கும் மேற்பட்ட எடையில் கிடைத்து வருவதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
÷சிறிய கட்லா மீன்கள் ஆற்றில் நிறைய இருப்பதால் அவை தனித்தனியே தான் தண்ணீருக்குள் சுற்றும். ஆனால் பெரிய மீன்கள் எப்போதும் ஜோடியாகத்தான் சுற்றும். அதனால் சனிக்கிழமை என் வலையில் முதலில் பெரிய பெண் மீன் கிடைத்தது. இதையடுத்து ஆண் மீனும் இங்கேயே தான் சுற்றிக் கொண்டிருக்கும் என்று முடிவு செய்து மீண்டும் அதே இடத்தில் வலை விரித்தேன். அப்போது அதில் ஆண் மீன் சிக்கிக் கொண்டது என்றார் மீனவர் கோவிந்தன்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 82.02 அடி**

First Published : 25 Jul 2010 10:01:34 AM IST

சேலம், ஜூலை 24: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 82.02 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,232 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,001 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 43.99 டி.எம்.சி.

**விவசாயிகளுக்கு தொழில் நுட்பப் பயிற்சி**

First Published : 25 Jul 2010 10:45:23 AM IST

திண்டுக்கல், ஜூலை 24: திண்டுக்கல் வட்டார விவசாயிகளுக்கு முன்பருவத் தொழில் நுட்பப் பயிற்சி தாடிக்கொம்பு கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பயிற்சிக்கு திண்டுக்கல் வட்டார வேளாண் உதவி இயக்குநர் தி.கார்த்திகேயன் தலைமை வகித்தார். தாடிக்கொம்பு பேரூராட்சித் தலைவர் விமலா முருகன் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் இல.மாயகிருஷ்ணன் வரவேற்றார்.

கோடை உழவு, மண்ணாய்வு செய்து மண்வள அட்டை பெறுதல், எலி ஒழிப்பு, வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம், விதை நேர்த்தி முறைகள், செம்மை நெல் சாகுபடி முறைகள், நவீன வேளாண் கருவிகள் உபயோகம், செம்மை நெல் சாகுபடி முறைகள், நவீன வேளாண் கருவிகள் உபயோகம், நீர் சிக்கனம், தேவையான அளவில் இயற்கை உரங்களை இடுதல் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**மானிய விலையில் இடுபொருள் விற்பனை**

First Published : 25 Jul 2010 10:51:07 AM IST

தேனி, ஜூலை 24: ஆண்டிபட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு இடுபொருள், உபகரணம் ஆகியவை மானிய விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது என்று வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கோவிந்தராஜன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

ஆண்டிபட்டி வட்டாரத்திற்குள்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதற்காக விதை நேர்த்தி மருந்துகள், உயிர் பூச்சிக்கொல்லி, வேம்பு மருந்து உள்ளிட்டவை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் விவசாயிகள் அந்தந்தப் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை அலுவலர்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**குறுவை சாகுபடி இழப்புக்கு நிவாரணம்**

First Published : 24 Jul 2010 01:01:05 PM IST

நாகப்பட்டினம், ஜூலை 23: குறித்த காலத்தில் மேட்டூர் அணை திறக்கப்படாததால் ஏற்பட்டுள்ள குறுவை சாகுபடி இழப்புக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் தலைமை வகித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. அண்ணாதுரை, என்.பி.கே.ஆர்.ஆர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மாவட்ட வருவாய் அலுவலர் பெ. சந்தானம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் விஸ்வநாதன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் வெ. பெரியசாமி, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ஆர். பிருந்தா, வேளாண் இணை இயக்குநர் கருணாகரன் மற்றும்

விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது :

ஏ. அலெக்ஸ்ஸண்டர் : நிகழாண்டின் சம்பா, தாளடி சாகுபடிக்கு ஜூலை மாத இறுதிக்குள் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விதை மற்றும் கன்றுகளை வழங்கும் பணிகளை தோட்டக் கலைத் துறை உடனடியாகத் தொடக்க வேண்டும்.

மாந்தை கே.எஸ். பாபு : பவர் டில்லருக்கான மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். மாந்தை-கருப்பூர் சாலை மேம்பாட்டுப் பணியை ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும்.

கொள்ளிடம் கோதண்டராமன் : நாகை மாவட்டம், பாப்பாக்குடிக்கும், கடலூர் மாவட்டம் முட்டம் கிராமத்துக்குமிடையே கட்டப்படும் பாலத்துக்குக் கீழே 6 அடி உயரத்தில் தடுப்பணைக் கட்டினால், கீழணையிலிருந்து வரும் உபரி நீரைத் தேக்கி, கொள்ளிடம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் கோடை சாகுபடிக்குப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

எம்.எஸ். முஜிபு ஷரீக் : தலைஞாயிறு, விழுந்தமாவடி மற்றும் சுற்றுப் பகுதிகளில் இறவைப் பாசனத் திட்டத்தை மேம்படுத்த வேண்டும். தலைஞாயிறு ஒன்றியப் பகுதிகளில் அதிகளவில் பண்ணைக் குட்டைகள் அமைக்க வேண்டும்.

கோபி கணேசன் : மயிலாடுதுறை மன்னன்பந்தல் பகுதியில் உள்ள கூட்டுறவு பால் குளிருட்டும் நிலையத்தை சீரமைத்து, அதன் செயல்பாட்டை மீண்டும் தொடக்க வேண்டும்.

வி. தனபாலன் : குறித்த காலத்தில் மேட்டூர் அணை திறக்கப்படாததால் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டை அரசு வழங்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் பேசியது: நாகை மாவட்டத்தில் நிகழாண்டில் இதுவரை 23,860 ஹெக்டேரில் குறுவை நடவு செய்யப்பட்டுள்ளது.

இதில், 11,677 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது, 7,800 டன் யூரியா, 3,027 டன் டி.ஏ.பி, 1,711 டன் காம்ளக்ஸ் உரங்கள் கையிருப்பில் உள்ளது. சாகுபடி பணிகளின் தேவைகளை அறிந்து, அந்தத் தேவைகளை நிறைவு செய்ய மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது என்றார் ஆட்சியர் ச. முனியநாதன்.

**இளம் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய்த் தாக்குதலா?**

First Published : 24 Jul 2010 01:45:10 PM IST

கிருஷ்ணகிரி, ஜூலை 23: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் அதிகமாக இருப்பதால், அதைக்கட்டுப்படுத்தும் முறை குறித்து

டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் தெரிவித்துள்ளார்.

மஞ்சளுக்கு சந்தையில் நல்ல விலை கிடைப்பதால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. குறிப்பாக கடந்த ஆண்டு மாவட்டம் முழுவதும் 2,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட மஞ்சள் பயிர், நடப்பாண்டில் ஊத்தங்கரை வட்டத்தில் மட்டும் 1,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது மஞ்சள் இளம் பயிராக உள்ளது. மாவட்டத்தில் நிலவும் மந்தமான தட்பவெட்பம், காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோயின் தாக்கம் அதிகமாக தென்படுகிறது.

இந்நோய் தாக்கிய பயிரின் இலைகளின் மேல்புறத்தில் சிறு சிறு கண் வடிவப் புள்ளிகள் தோன்றிப் பழுப்பு நிற புள்ளிகளாக மாறும். நாளடைவில் நோய் தீவிரமடையும் போது புள்ளிகள் ஒன்றோடொன்று இணைந்து பெரிதாகி இலைகள் காய்ந்து விடும். இதனால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்படும். கட்டுப்படுத்தும் முறை: இந்நோயை கட்டுப்படுத்த, நோய் பாதிக்கப்பட்ட இலைகளை உடனே பயிரிலிருந்து கிள்ளி அகற்றி அழிக்க வேண்டும். மேலும் ஒரு ஏக்கருக்கு கார்பென்டசிம் 200 கிராம் அல்லது காப்பர் ஆக்சிகுளோரைடு 500 கிராம் அல்லது மேன்கோசெப் 400 கிராம் மருந்தை 15 நாள்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதன் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்தலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**தென்னை மரக் காப்பீட்டுத் திட்டம் தொடக்கம்**

First Published : 24 Jul 2010 12:53:13 PM IST

தஞ்சாவூர், ஜூலை 23: தஞ்சாவூர் மாவட்டத்தில் தென்னை மரக் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பயிர்க் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்தத் திட்டத்துக்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்து வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

காப்பீடு செய்ய விரும்பும் மரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பிரிமிய தொகையை குறிப்பிட்ட முகவரிக்கு வரைவோலையாக எடுத்து, ஏதேனும் ஒரு தென்னை சாகுபடிக்கான ஆதாரத்தையும் இணைத்து வேளாண்மைத் துறை அல்லது தோட்டக்கலைத் துறை அலுவலகங்களில் அளிக்க வேண்டும்.

விவசாயிகள் தாங்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலும் பிரிமிய தொகையைச் செலுத்தலாம். காப்பீடு செய்யப்படும் மரங்கள் ஆண்டுக்கு 30 காய்களுக்கு மேல் மகசூல் தரக் கூடியதாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் பலன் தரக் கூடிய 10 மரங்களாவது சாகுபடி செய்திருக்க வேண்டும்.

ஒரு விவசாயி காப்பீடு பெற அவரவர் பண்ணையிலுள்ள அனைத்து தென்னை மரங்களையும் முழுமையாக காப்பீடு செய்தாக வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு சுமார் 175 மரங்கள் மட்டுமே காப்பீடு செய்ய தகுதி பெறும். பிரிமியத் தொகை எந்த தேதியில் செலுத்தப்படுகிறதோ அதற்கு அடுத்த மாதத்தில் இருந்து ஓர் ஆண்டுக்கு பாலிசி வழங்கப்படும்.

பாலிசி தொடங்கி ஒரு மாத காலத்துக்குள் ஏற்படும் இழப்பீட்டுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்படாது. ஆண்டுதோறும் பிரீமியம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 94437-80661 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.

**விதை நேர்த்தி செய்ய விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை**

First Published : 24 Jul 2010 11:19:55 AM IST

பரமக்குடி, ஜூலை 23: விவசாயிகள் உழுது விதைக்கும் காலமாதலால், விதைக்கும் முன் விதைகளை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால், பயிர்கள் வறட்சியைத் தாங்குவதுடன், நோய்கள் தாக்காமல் சாகுபடி செலவு குறைந்து அதிக மகசூல் பெறலாம் என, பரமக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குநர் ச. கண்ணையா தெரிவித்தார்.

விதை நேர்த்தி என்பது பயிர்களைத் தாக்கும் நோய்கள் வராமல் தடுக்க வருமுன் காக்கும் நடவடிக்கையாகும். தற்போது, மாவட்டத்தில் உழவுக்கு ஏற்ற மழை பெய்துள் ளதால், நெற்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் நிலங்களை உழுது வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து, விதைகளை விதைக்கும் முன் அவற்றை நேர்த்தி செய்த பின்னரே விதைக்க வேண்டும். இதனால், நன்மைகள் பல ஏற்படுவதுடன், மகசூல் அதிகரித்து லாபம் கிடைக்கும். இந்த விதை நேர்த்தியால், விதைகள் காற்றில் உள்ள தழைச் சத்தை மண்ணில் நிலைநிறுத்தி பயிருக்கு கிடைக்கச் செய்கிறது.

விதை நேர்த்தி செய்வது எப்படி: பொட்டாஷ் கரைசல் விதை நேர்த்தி:

மானாவாரியாக விதைப்பு செய்யப்படும் நெல் விதைகளை 1 சதம் பொட்டாஷ் கரைசல் கொண்டு விதை நேர்த்தி செய்திட வேண்டும். இதனால், பயிருக்கு வறட்சியை தாங்கும் தன்மை உண்டாகிறது.

ஒரு ஏக்கர் விதைப்புக்கு 40 கிலோ நெல் விதை தேவை. இதனை 40 லிட்டர் தண்ணீருடன், 400 கிராம் பொட்டாஷ் உரத்துடன் கலந்து தயார் செய்யப்பட்ட கரைசலில் 20 மணி நேரம் ஊற வைக்கவேண்டும்.

பின்னர், தண்ணீரை வடித்து விதைகளை நிழலில் உலர்த்தி, முந்தைய காய்ச்சல் பதம் வரை காய வைக்கவேண்டும். இந்த விதையினை உடனடியாகவோ, ஒரு மாதம் வரை சேமித்து வைத்தோ விதைப்பு செய்திடலாம்.

பூஞ்சாள விதை நேர்த்தி: விதை மற்றும் மண் மூலம் பரவிடும் நோய்களை வராமல் தடுக்க, பூஞ்சாள விதை நேர்த்தி செய்யப்படுகிறது. எல்லா வகை பயிர்களுக்கும் இம்முறையைக் கையாளலாம்.

கார்பன்டசிம் ரசாயன மருந்து என்றால், ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் என்ற அளவிலும், சூடோமோனாஸ் புளோரசன்ஸ் பாக்டீரிய கலவை என்றால், கிலோவுக்கு 10 கிராம் என்ற அளவிலும் விதையுடன் நன்கு கலந்து, 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைப்பு செய்ய வேண்டும்.

உயிர் உர விதை நேர்த்தி:

நெல் விதைக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன், அசோஸ்பைரில்லம் 200 கிராம் பாக்கெட்டை, ஒரு டம்ளர் ஆறிய வடிகஞ்சியுடன் கலந்து பின் விதையுடன் நன்கு கலக்கவேண்டும். இதில், சிறு தானியங்கள், எள் மற்றும் சூரியகாந்தி பயிர்க ளுக்கு அசோஸ்பைரில்லமும், நிலக்கடலை பயிருக்கு ரைசோபியமும் பயன்படுத்த வேண்டும்.

பூஞ்சாள விதை நேர்த்தி செய்த 24 மணி நேரம் கழித்து, உயிர் உர விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதையடுத்து, 24 மணி நேரத்துக்குள் விதைப்பு செய்திட வேண்டும். இவ்வாறு செய்வதால், காற்றிலுள்ள தழைச்சத்து மண்ணில் நிலை நிறுத்தப்பட்டு, பயிருக்குக் கிடைக்கும். இதனால், உரச் செலவில் 25 சதவீதம் குறைவதுடன், மகசூல் 10 முதல் 25 சதவீதம் வரை கூடுதலாகக் கிடைக்கும். இதேபோல், ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் பாஸ்போபாக்டீரியா பொட்டலம் ஒன்றினைக் கலந்து விதைக்கலாம்.

இதனால், மண்ணில் பிடித்து வைக்கப்பட்டுள்ள மணிச்சத்து மண்ணிலிருந்து விடுவிக்கப்பட்டு, பயிருக்கு எளிதாக கிடைக்கும் என்றார் வேளாண்மை உதவி இயக்குநர்.

**எடப்பாடியில் சிக்கிய மெகா மீன் ஜோடி!**

First Published : 25 Jul 2010 01:39:13 PM IST

எடப்பாடி, ஜூலை 24: சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே உள்ள காவிரி ஆற்றில் 45 கிலோ மற்றும் 42 கிலோ எடையுள்ள ராட்சத கட்லா வகை மீன்கள் சனிக்கிழமை சிக்கின.

÷எடப்பாடி அருகே உள்ள கோனேரிப்பட்டியில் உள்ள காவிரி ஆற்றில் மீனவர்கள் ஏராளமானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மீனவர்கள் சிலர்

சனிக்கிழமை மீன் பிடிப்பதற்காக காவிரி ஆற்றுக்குச் சென்றனர். அப்போது மீனவர் கோவிந்தன் என்பவர் வலையில் 45 கிலோ எடையுள்ள பெண் மீனும், 42 கிலோ எடையுள்ள ஆண் மீனும் சிக்கின. வழக்கமாக ஏழு கிலோ வரை மட்டுமே கிடைக்கும் கட்லா வகை மீன்கள் தற்போது 10 கிலோவுக்கும் மேற்பட்ட எடையில் கிடைத்து வருவதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ÷சிறிய கட்லா மீன்கள் ஆற்றில் நிறைய இருப்பதால் அவை தனித்தனியே தான் தண்ணீருக்குள் சுற்றும். ஆனால் பெரிய மீன்கள் எப்போதும் ஜோடியாகத்தான் சுற்றும். அதனால் சனிக்கிழமை என் வலையில் முதலில் பெரிய பெண் மீன் கிடைத்தது. இதையடுத்து ஆண் மீனும் இங்கேயே தான் சுற்றிக் கொண்டிருக்கும் என்று முடிவு செய்து மீண்டும் அதே இடத்தில் வலை விரித்தேன். அப்போது அதில் ஆண் மீன் சிக்கிக் கொண்டது என்றார் மீனவர் கோவிந்தன்.

தினமலர்

**கோயம்பேடு மார்க்கெட்டில் சென்ட் மல்லி விற்பனை தூள்**

கோயம்பேடு : கோயம்பேடு மார்க்கெட்டில், அம்மனுக்கு பயன்படுத்தப்படும் மஞ்சள் நிற சென்ட் மல்லி பூக்களின் விற்பனை களைகட்டியுள்ளது.
கோயம்பேடு மார்க்கெட்டிற்கு தமிழக - ஆந்திரா எல்லைப்பகுதி மற்றும் தமிழக - கர்நாடக எல்லைப் பகுதிகளில் இருந்து, "துளிர் சாமந்தி' என்றழைக்கப்படும் மஞ்சள் நிற சென்ட் மல்லி பூக்களின் வரத்து உள்ளது.நாள்தோறும் மார்க்கெட்டிற்கு 10 டன்னுக்கும் அதிகமாக வந்திறங்கும் இப்பூக்கள், தரத்தை பொறுத்து, கிலோ ஒன்றுக்கு 10 முதல் 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது.தற்போது ஆடி மாதம் தொடங்கி விட்டதால், அம்மன் கோவில்களில் திருவிழாக்கள் விசேஷமாக நடந்து வருகின்றன.அங்கு அம்மன் வழிபாடுக்கு சென்ட் மல்லி பூக்களே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.அதனால், கோயம்பேடு மார்க்கெட்டில் இப்பூக்களின் விற்பனை தற்போது அதிகரித்துள்ளது.குறிப்பாக செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சில்லரை வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.

கோயம்பேடு பூ மார்க்கெட் சங்கச் செயலர் மூக்கையா கூறியதாவது:ஆரம்ப காலங்களில் ஆரஞ்சு நிறத்தில் வந்து கொண்டிருந்த இப்பூக்கள், பின், விவசாய தொழில்நுட்பத்தில் ஒட்டுரக முறையை பயன்படுத்தி, மஞ்சள் நிற பூக்களாக உருவாகின.தற்போது, மஞ்சள் நிற சென்ட் மல்லி பூக்களே அதிகளவில் விளைந்து மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.ஆரம்ப காலங்களில் கோவில்களில் பயன்படுத்தப்படாமல் இருந்த இப்பூக்கள், தற்போது அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.இவ்வாறு மூக்கையா கூறினார்.

பருவ மழையால் பால் உற்பத்தி அதிகரிப்பு:பால் உப பொருட்களின் விலை கடும் வீழ்ச்சி

செஞ்சி:செஞ்சி சுற்றுவட்டார பகுதியில் பெய்த சீரான பருவ மழையினால் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. வழக்கத்திற்கு மாறாக பால் உற்பத்தி முன்னதாகவே அதிகரித்திருப்பதால், பால் உப பொருட்களின் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட் டுள்ளது. இதனால் பால் கொள்முதல் விலையை குறைக்க தனியார் பால் நிறுவனங்கள் உத்தேசித்துள்ளன.விழுப்புரம் மாவட்டம் செஞ் சியை சுற்றி தொன்று தொட்டு ஏராளமானவர்கள் கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக கால்நடை வளர்ப்பை ஊக்கப் படுத்தும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கும், தனி நபர்களுக்கும், வங்கிகளும், தனியார் நிதி நிறுவனங்களும் அதிகளவில் கால் நடை வளர்ப்பிற்கு கடன் வழங்கினர்.

இதன் காரணமாக அதிக பால் தரும் வீரிய கலப்பின பசுக்களின் எண்ணிக்கை செஞ்சி பகுதியில் அதிகாரித்துள்ளது. இதே போல் திருவண்ணாமலை மற்றும் அந்த மாவட்டத்தை சேர்ந்த வந்தவாசி பகுதியிலும் கடந்த சில ஆண்டுகளில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.இதன் காரணமாக 10க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் இப்பகுதியில் 20க்கும் மேற்பட்ட இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்களை அமைத்து பால் கொள்முதல் செய்கின்றன.

வழக்கமாக அக்டோபர், நவம்பர் மாதங்களில் பால் உற்பத்தி 20 சதவீதம் வரை அதிகரிக்கும். இதை சமாளிப்பதற்கு தனியார் பால் நிறுவனங்கள் தகுந்த முன்னேற்பாடுகளை செய்து கொள்வர்.இந்த ஆண்டு செஞ்சி, வந்தவாசி, திருவண்ணாமலை பகுதியில் பெய்த சீரான பருவ மழையினால் கால் நடைகளுக்கு அதிகளவில் பசுந்தீவனங்கள் கிடைத்தன. இதன் காரணமாக பால் உற்பத்தி வழக்கத்தை விட முன்னதாக ஜூன் மாதத்திலேயே 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இதே நிலை அடுத்த சில மாதங்களுக்கு தொடரும் என தெரிகிறது.

வழக்கமாக ஜூன், ஜூலை மாதத்திற்கு தேவையான பால் உப பொருட்களான வெண்ணெய், நெய், பால் பவுடர் போன்றவை பற்றாக் குறை ஏற்படாமல் இருக்க தேசிய பால் அபிவிருத்தி வாரியத்தின் மூலம் இறக்குமதி செய்து இருப்பு வைப்பது வழக்கம்.இந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களிலேயே பட்டர் ஆயில் மற்றும் பால் பவுடரை 50 சதவீதம் இறக்குமதி செய்துள்ளனர். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அடுத்து 50 சதவீதம் பட்டர் ஆயில் மற்றும் பால் பவுடரை இறக்குமதி செய்வர். இதனால் இந்த ஆண்டு முழுவதும் பற் றாக்குறை ஏற்படாது என்பதால் பால் விலை குறைவாகவே இருக்கும்.

இந்த ஆண்டு வழக்கத்தைவிட பால் உற்பத்தி தமிழகத்தில் மட்டும் இன்றி தேசிய அளவில் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இதனால் இந்திய சந்தையில் வெண்ணெய், நெய், பால் பவுடரின் வரத்து அதிகரித்து விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.இதுவரை செஞ்சி, திருவண்ணாமலை,

வந்தவாசி பகுதியில் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள் முதல் செய்து வந்த தனியார் நிறுவனங்கள் அரசு கொள்முதல் விலையை விட கூடுதல் விலை கொடுத்து வந்தனர். தற்போது சந்தையில் பால் உப பொருட்களின் விலையில் ஏற்பட்டுள்ள சரிவை சமாளிக்க தனியார் பால் நிறுவனங்கள் பால் கொள்முதல் விலையை குறைக்க திட்டமிட்டுள்ளன.

**செழித்து வளர்ந்துள்ள கம்பு பயிர் தியாகதுருகம் விவசாயிகள் மகிழ்ச்சி**

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதியில் மானாவாரியில் பயிரிடப்பட்ட கம்பு பயிர் செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தியாகதுருகம் பகுதியில் 10 ஆயிரத் திற்கும் மேற்பட்ட ஏக்கர் மானாவாரி நிலங்கள் உள்ளன. பாரம்பரியமாக ஆண்டுதோறும் ஜூன் மாத இறுதியில் பெய்யும் தென்மேற்கு பருவமழை ஈரத்தை பயன்படுத்தி கம்பு சாகுபடி செய்வது வழக்கம். சமீப காலமாக கம்பு மூலம் தயாரிக்கப்படும் உணவுகளை மக்கள் தவிர்த்து அரிசி உணவுக்கு மாறி வருகின்றனர்.

இதனால் கம்புக்கு மவுசு குறைந்து இவற்றை தீவனங்கள் தயாரிக்க பயன்படுத்தும் நிலையே உள்ளது. பாரம்பரிய குறுந்தானியங்களில் முக் கிய இடம் பிடித்த கம்பின் பயன் பாடு குறைந்ததால் எதிர்பார்த்த விலை கிடைப்பதில்லை. பல நேரங்களில் குறித்த தருணத்தில் மழை பொய்த்து விடுவதால் அதிக மகசூல் கிடைக் கும் என்று நம்பி கம்பு சாகுபடி செய்ய முடியாமல் பல விவசாயிகள் தயக் கம் காட்டி தவிர்த்து விடுகின்றனர்.இதனால் கம்பு சாகுபடிக்கு ஏற்ற சூழல் இருந்தும் பல ஆயிரக்கணக் கான ஏக்கர் மானாவாரி நிலங்கள் கரம்பாக விடப்பட்டுள்ளது.

இதில் ஆண்டுக்கு ஒருமுறை அக்., மாதத் தில் உளுந்து பயிரை மட்டுமே சாகுபடி செய்து திருப்தியான லாபம் ஈட்டிவருகின்றனர். இருப்பினும் தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் ஒருசில விவசாயிகள் கம்பு பயிரை இவ்வாண்டும் நம்பிக்கையோடு சாகுபடி செய்துள்ளனர்.அதை மெய்யாக்கும் வகையில் அவ்வப்போது இப்பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் பயிர் செழித்து வளர்ந்துள்ளது. இது கம்பு பயிரிட்ட விவசாயிகளுக்கு மகிழ்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. செடிகள் ஊட்டமாக வளர்ந்துள்ளதால் ஓரளவு லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது. தற்போது பயிரில் வளர்ந்துள்ள களை அகற்றி பராமரித்து வருகின்றனர்.இவ்வாண்டு கம்பு நல்ல பலன் கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் உள்ளனர்.

**கரும்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்: அரசின் நடவடிக்கையால் பலன் கிட்டியது**

சேத்தியாத்தோப்பு:சேத்தியாத்தோப்பு பகுதியில் கரும்பு விலை உயர்வு மற்றும் எம்.ஆர். கே., சர்க்கரை ஆலை ஆட்சியரின் அதிரடி நடவடிக்கையால் கரும்பு பயிரிட விவசாயிகள் ஆர்வம்

காட்டி வருகின்றனர்.சேத்தியாத்தோப்பு பகுதியில் நெல் மட்டுமே பயிரிட்டு வந்த விவசாயிகளுக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியில் உருவாக்கப்பட்ட சர்க் கரை ஆலை வரப்பிரசாதமாக அமைந்தது. 1989ம் ஆண்டு சர்க்கரை ஆலை துவக்கப்பட்டதிலிருந்து இப்பகுதி விவசாயிகள் உணவுத் தேவைக்கு நெற் பயிரையும், பணத்தேவைக்கு கரும்பையும் பயிரிட்டு வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக எதிர்பார்த்த விலை கிடைக்காததால் கரும்பு பயிரிட தயங்கினர்.

இந்நிலையில் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்புத் துறையில் நடந்த முறைகேடுகளால் இனிக் கும் கரும்பு, விவசாயிகளுக்கு வேம்பாகியது.இதன் காரணமாக கடந்த 2009-2010ம் ஆண்டு குறைந்த பட்ச அறவைத் திறனுக்கு தேவையான 4.5 லட்சம் டன் கரும்பு கூட கிடைக்காததால் 2 லட் சத்து 635 டன் மட்டுமே கரும்பு அறவை செய்யப் பட்டது. ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கி வந்த ஆலையை மீட்கும் வகையில் தமிழக அரசும் சர்க் கரை துறை ஆணையமும் இணைந்து, ஆலைக்கு புதிய ஆட்சியராக ஆசியா மரியத்தை கடந்த பிப்ரவரி மாதம் நியமித்தது.

அதே நேரத்தில் மத்திய, மாநில அரசுகள் 2010-2011 கரும்பு டன்னுக்கு 2 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்து அறிவிப்பு வெளியிட்டது.அரசின் இந்த அறிவிப்பு விவசாயிகளுக்கு ஓரளவிற்கு ஆறுதலை தந்த போதிலும் பருவ மழை மாற்றம், இயற்கை சீற்றம், மின் தட்டுப்பாடு, கூலித் தொழிலாளர்கள் பற் றாக்குறை என பல்வேறு பிரச்னைகள் விவசாயிகளை அச்சுறுத்தியது.நிலமையை உணர்ந்து எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலையின் ஆட் சியர் ஆசியா மரியம் ஆலை நிர்வாகத்தில் இருந்த முறைகேடுகளை களைய நடவடிக்கை மேற் கொண்டார்.

அதன் காரணமாக கரும்பு உதவியாளர் கள் உரிய நேரத்திற்கு பணிக்கு வரத் துவங்கினர். கரும்பு வெட்டு உத்தரவுகளை கம்ப்யூட்டர் மூலம் வழங்க ஏற்பாடு செய்தார்.மேலும், அனைத்து கரும்பு கோட்ட அலுவலகங்களுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்ததோடு, 50க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு நேரடியாக சென்று அப்பகுதி விவசாயிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டார். அந்த குறைகளை களையவும் நடவடிக்கை மேற்கொண்டார். ஆட்சியரின் அதிரடி நடவடிக்கை ஆலையின் நிர்வாகத்தின் மீது விவசாயிகளுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், தமிழக அரசு சமீபத்தில் கூட்டுறவு சர்க் கரை ஆலைகளில் கூட்டு மின் உற்பத்தி திட்டத்தை உருவாக்கியிருப்பதும் விவ சாயிகளிடையே கரும்பு பயிரிட ஆர்வத்தை தூண் டியுள்ளது. 2009-2010ம் ஆண்டு கரும்பு பதிவு மிக குறைவாக இருந்த நிலையில் உடனடி பதிவுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தும் கூட 10 ஆயிரத்து 590 ஏக்கர் கரும்பு பயிர் மட்டுமே பதிவு செய்து

அறவை செய்யப் பட்டது. ஆட்சியரின் அதிரடி நடவடிக்கை மற்றும் அரசின் புதிய அறிவிப்புகளால் இப்பகுதி விவசாயிகள் தற்போது ஆர்வத்துடன் கரும்பு பயிரிட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக நடப்பு (2010-2011ம்) ஆண் டின் அறவை பருவத்திற்கு கடந்த ஜூன் மாதம் வரையில் 10 ஆயிரத்து 436 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜூலை மற்றும் ஆகஸ்ட் 15ம் தேதி வரையில் கரும்பு பதிவிற்கான காலக்கெடு உள்ளதாலும், உடனடி பதிவு திட்டத்தின் மூலம் மேலும் ஆயிரம் ஏக்கர் வரை கரும்பு பதிவாகும் என ஆலை நிர்வாகத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.மேலும், ஆட்சியரின் நடவடிக்கையால் புதிய ரக கரும்பு பயிர்கள் நடவு செய்துள்ளதால் அதிக மகசூல் வாய்ப்பு இருக்கும் என்பதால் ஆலை அறவைக்கு தேவைக்கு கூடுதலாகவே கரும்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விளைபொருள் விலை நிலவரம் எஸ்.எம்.எஸ்., மூலம் பெற ஏற்பாடு**

ஆலங்குடி: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்திலிருந்து, எஸ்.எம் .எஸ்., மூலம் விளைபொருள் விலை நிலவரம் உள்ளிட்ட விபரங்களை தெரிந்துகொள்ள விரைவில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

விலைபொருள் விலை நிலவரம், பூச்சி தாக்கிய பயிருக்கு என்ன மருந்து அடிக்க வேண்டும் என்று தெரிய வேண்டுமா, விதை டிப்போவில் இருக்கா, இ ல்லையா? உள்ளிட்ட தகவல்க ளை விவசாயிகள் எஸ்.எம்.எஸ் ., மூலம் தெரிந்துகொள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் ஏற்பாடு செய்து வருகிறது.

விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய விபரங்களை தெரிவித்து நிலையத்துக்கு எஸ்.எம் .எஸ்., அனுப்பினால், அவர்களுக்கு தேவையான தகவல்கள் தமிழில் அனுப்பி வைக்கப்படும். இதற்காக மும்பையில் உள் ள, "நெட்கோர் சொலுயூசன்ஸ்' என்ற நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தை வேளாண் அறிவியல் மையம் செய்துள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் முகவரி, மொபைல்ஃபோன் என் ஆகியவற்றை வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சின்னையன் தெரிவித்துள்ளார்.

**முசிறி உழவர் சந்தையில் வியாபாரம் செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

முசிறி: "முசிறி பகுதி விளையும் விளை பொருட்களை விவசாயிகள் உழவர் சந்தையில் விற்று பயனடைய வேண்டும்,' என முசிறி உழவர் சந்தை நிர்வாக அலுவலர் புஷ்பா கேட்டுக்கொண்டுள்ளார்.

அறிக்கையில் உள்ளதாவது: முசிறி உழவர் சந்தையில் நாள்தோறும் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் காய்கறிகள் வியாபாரம் செய்து வருகின்றனர். தற்போது உழவர் சந்தையில் சுத்தமான பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்கள் பண்ணையில் கிடைக்கும் சுத்தமான பால், தயிர், வெண்ணெய், காளான் மற்றும் மல்லிகைப்பூ, கனகாம்பரம் ஆகியவற்றையும் உழவர் சந்தையில் விற்று பயனடையலாம்.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் தங்களது சொந்த தயாரிப்புகளான மண்புழு உரம், பஞ்சகாவ்யா, காய்கறி விதைகள், கம்பு மாவு, சோளம், கேழ்வரகு மாவு ஆகியவற்றால் செய்யப்பட்ட பூட்டு, தோசை வகைகள், காளான் சூப், ஆப்பிள், ஆரஞ்சு, அன்னாசி, சப்போட்டா போன்ற பழ வகைகளையும் உழவர் சந்தையில் விற்பனை செய்யலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**29ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி: திருச்சி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ம் தேதி காலை 10.30 மணிக்கு, கலெக்டர் (பொ) ராமன் தலைமையில் நடக்கிறது. வேளாண் தொடர்பான அனைத்துத்துறை அதிகாரிகளும் பங்கேற்கின்றனர்.

நீர்ப்பாசனம், வேளாண் இடுபொருட்கள், வேளாண் தொடர்பான கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ விவசாயிகள், விவசாயச் சங்க பிரதிநிதிகள் தெரிவித்து, பயனடையலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**கரும்பு அரவை கூலியை அரசே நிர்ணயம் செய்ய வலியுறுத்தல்**

ஈரோடு: அரவை ஆலைகளில், கரும்பு அரவை கூலியை அரசே நிர்ணயிக்க வேண்டும்; கரும்பை ஒரு மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றித்தர வேண்டும் என கீழ்பவானி பாசன சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு 150 கோடி டன் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் கரும்பை அரைக்க இந்தியாவில் மொத்தம் 600 ஆலைகள் உள்ளன. தமிழக

அளவில் ஈரோடு, கடலூர், திருச்சி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் கரும்பு அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தில் 42 கரும்பு அரவை ஆலைகள் உள்ளன. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் ஆறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் தனியார் ஆலைகள் இயங்கி வருகின்றன. கரும்புக்கு ஆதார விலையாக டன்னுக்கு 2,000 ரூபாய் வழங்கக்கோரி பல்வேறு விவசாய அமைப்புகள் மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தின. போராட்டத்தின் எதிரொலியாக அரசானது டன்னுக்கு 1,750 ரூபாய் வழங்குவதாக அறிவித்தது. ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டு 35 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி கூறியதாவது: தமிழக விவசாயிகள் கரும்பு டன் ஒன்றுக்கு 2,000 ரூபாய் கேட்டு பல ஆண்டாக போராடி வருகின்றனர். ஒரு டன் கரும்பு மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக கணக்கிடும்போது அதன் மதிப்பு 15 ஆயிரம் ரூபாயாக மாறுகிறது. ஒரு டன் கரும்பில் 95 கிலோ சர்க்கரை கிடைக்கிறது. நூறு யூனிட் மின்சாரம் தயாரிக்க முடியும்; கரும்பு சக்கை, 45 கிலோ மொலாஸ், பத்து லிட்டர் எரிசாராயம், 20 லிட்டர் குடிசாராயம் கிடைக்கிறது.ஈரோடு மாவட்டத்தில் அதிகளவில் சி.ஓ.,353 ரக கரும்பு அதிகளவில் பயிரிடப்படுகிறது. ஆண்டுதோறும் விலையும் கரும்பை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி சர்க்கரை, மின்சாரத்தை, மதுவை திருப்பி வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரும்.
இன்றுள்ள கரும்பு விவசாயிகள் சர்க்கரை ஆலைகளின் கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர். நெல் அரைக்க ஆலைகளில் கூலி நிர்ணயம் செய்தது போல், கரும்பு அரவைக்கான கூலியை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும்.கரும்பு கட்டுப்படுத்தும் சட்டம் சென்ற 45 ஆண்டுக்கு முன் கொண்டு வரப்பட்டது. கரும்பு உற்பத்தியில் மறைமுக விவசாயிகள் சுரண்டப்படுகின்றனர், வஞ்சிக்கப்படுகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் இயங்கி வந்த பொதுத்துறை கரும்பாலைகள் மூடப்பட்டு விட்டன. தனியார் கரும்பாலைகள் மட்டுமே அதிகளவில் இயங்கி வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

**முருங்கை விலை தொடர்ந்து உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

வெள்ளகோவில்: வெள்ளகோவில் வார சந்தையில் முருங்கை விலை அதிகரித்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலத்தில் தேவை அதிகமானதால், விலையேற்றம் காணப்பட்டதாக தெரிகிறது.வெள்ளகோவில் வார சந்தையில் ஒவ்வொரு ஞாயிறும் முருங்கை ஏலம் நடக்கிறது. நேற்று மர முருங்கை 25 காய் கொண்ட ஒரு கட் 35 முதல் 40 ரூபாய் வரை விற்றது. செடி முருங்கை 25 காய் கொண்ட ஒரு கட் 25 முதல் 45 ரூபாய் வரை

விற்றது. 600 மரமுருங்கை கொண்ட ஒரு சாக்கு 1000 ரூபாய்க்கும், 600 காய் கொண்ட செடி முருங்கை ஒரு சாக்கு விலை 1000 ரூபாய்க்கும் விற்றது.

நேற்று 400 மூட்டை முருங்கை காய்களை மட்டுமே விவசாயிகள் கொண்டு வந்தனர். மரமுருங்கை ஒரு கிலோ 20 ரூபாய், செடி முருங்கை ஒரு கிலோ 22 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் ஒரு கிலோவுக்கு 10 ரூபாய் வரை அதிகமாக விற்கப்பட்டது. 600 காய் கொண்ட மூட்டைக்கு 450 ரூபாய் வரை அதிகம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.ஆந்திரா, சட்டீஸ்கர், மேற்கு வங்காளம், கேரளா ஆகிய மாநிலங்களுக்கு அதிகளவில் ஆர்டர் பெறப்பட்டதால், முருங்கை விலை உயர்வுக்கு காரணம் என கூறப்படுகிறது.

**களை கட்டும் நாவல் பழம் விற்பனை**

கோபிசெட்டிபாளையம்: கோபியில் நாவல்பழம் வியாபாரம் களை கட்டியுள்ளது. இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் செல்வோர் சத்தி சாலையில் நாவல் பழங்களை வாங்கி செல்கின்றனர்.

கருமை கலந்த நிறத்தில் வித்தியாசமான சுவை கொண்ட நாவற்பழங்களுக்கு தற்போது சீஸன் காலம். மற்ற பழங்களை போல் தோட்டத்தில் வைத்து நாவற்பழம் மரங்களை வளர்க்க முடியாது. நெடுஞ்சாலைகள், வனப்பகுதிகளில்தான் நாவல்பழ மரங்களை அதிகம் காண முடியும். ஆண்டுதோறும் ஆனி, ஆடி மற்றும் ஆவணி மாதங்களில் பழங்கள் அதிகளவில் விளையும். உடலில் உள்ள சர்க்கரையின் அளவை சீராக்கும் சக்தி இந்த பழத்துக்கு உண்டு என நாட்டு வைத்தியத்தில் கூறப்படுகிறது. நாவல் பழங்களை சாப்பிடுவதில் சிறுவர் முதல் பெரியவர் வரை ஆர்வம் காட்டுகின்றனர்.

கோபியில் சத்தி ரோடு, அத்தாணி ரோடு மற்றும் ஈரோடு ரோடுகளின் இருபுறமும் நூற்றுக்கும் மேற்பட்ட நாவல் பழ மரங்கள் உண்டு. பழுத்து கீழே விழும் பழங்களில், தூசி படாமல் இருக்க பாலித்தீன் பைகளை ரோட்டில் விரித்து, விவசாயிகள் பழங்களை சேகரிக்கின்றனர்.பின்னர் தண்ணீரால் சுத்தம் செய்து, அந்த இடத்திலேயே இரண்டு ரூபாய் முதல் 10 ரூபாய் வரை, கேட்கும் விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதனால் சத்தி ரோடு உள்ளிட்ட பகுதிகளில் நாவல்பழம் விற்பனை "களை' கட்டியுள்ளது.

**சொட்டு நீர் பாசன மானியம் உயர்த்தி வழங்க கோரிக்கை**

ராசிபுரம்: "தோட்டக்கலைத்துறை மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்க, விவசாயிகளுக்கு மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்' என, மாவட்ட துல்லிய பண்ணை சங்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் முருகேசன், தமிழக அரசுக்கு மனு அனுப்பி உள்ளார். அந்த மனுவில், 2008-09ம் ஆண்டு தோட்டக்கலைத்துறை மூலம் சங்க உறுப்பினர்களுக்கு 50 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க கருவிகள் வழங்கப்பட்டது. 2009ம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு பின், சொட்டு நீர் பாசன முறையை பின்பற்றும் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியம் வழங்கப்படுவதாக தெரிகிறது. அரசு, சொட்டு நீர் பாசனம் செய்துவரும் விவசாயிகளுக்கு மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என, கூறப்பட்டுள்ளது.

**பயிர் உற்பத்தி அதிகரிக்க மண் பரிசோதனை: உதவி இயக்குனர்**

கரூர்: "விவசாயிகள் மண்ணின் வளம் கண்டறிந்து பயிருக்கு உரமிட்டால், பயிர் உற்பத்தியை பெருக்கலாம்' என, அரவக்குறிச்சி தோட்டக்கலைத்துறை உதவி இய க்குனர் சவுந்தரம்மாள் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் உள்ளதாவது: மண்ணின் வளம் அறிந்து, தன்மைக்கு ஏற்ப பயிர் சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும். மண் பரிசோதனைக்கு மண் மாதிரிகளை சரியான முறையில் எடுக்க வேண்டும். மாதிரி தவறாக இருந்தால் பரிசோதனை முடிவு தவறாகி மகசூல் பாதிப்படையும். வரப்பு ஓரம், நடைபாதை, உரம் குவிந்த இடம், நிழல்படும் இடங்களில் மண் மாதிரி எடுக்கக் கூடாது.

மாதிரி எடுக்கும் இடத்தின் மேல்புறம் சுத்தம் செய்து 15 செ.மீ., குழிவெட்டி அதிலிருந்து மாதிரிக்கான மண்ணை வழித்து எடுக்க வேண்டும். ஒரு ஏக்கரில் 10 முதல் 15 இடங்களில் மண் மாதிரி எடுத்த பிறகு, அனைத்து பகுதியிளிலும் சேகரித்த மண்ணை சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் கொட்டி கல் மற்றும் தாவர உபரிகளை அகற்றி நிழலில் காயவைக்க வேண்டும்.

சேகரித்த மண்ணை நான்கு பாகமாக பிரித்து, இரண்டு பாகங்களிலிருந்து அரை கிலோ எடுத்து, முழு முகவரி, சர்வே எண், முன்னர் பயிரிட்ட பயிர், தற்போது பயிரிடப்போகும் பயிர் குறித்த விபரம் எழுதி கரூர் வெங்கமேட்டில் உள்ள மண் பரிசோதனை மையத்தில் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

ஆய்வு முடிவு பெற்று, அரவக்குறிச்சி யூனியன் அலுவலக வளாகத்தில் செயல்படும் வேளாண்மை அலுவலகத்தில் தோட்டக்கலைத்துறை அலுவலர்களிடம் தொழில்நுட்ப ஆலோசனை பெறலாம். மண்ணின் வளம் கண்டறிந்து பயிருக்கு உரமிட்டால் மண்ணை பாதுகாப்பதுடன், பயிர்

உற்பத்தியை பெருக்கி லாபம் அடைய முடியும். உரிய காலத்தில் மண் மாதிரி பரிசோதனை அவசியமானது.

**விவசாயிகள் கூட்டம்**

பரமக்குடி : நயினார்கோவில் ஒன்றியம் காரடர்ந்தகுடியில் மாவட்ட வேளாண்மை இயக்குனர் சத்தியமூர்த்தி தலைமையில் விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது. துணை இயக்குனர் ராஜேந்திரன்(மாநில திட்டம்), சக்திமோகன்(மத்திய திட்டம்) தொழில் நுட்ப உரையாற்றினர். உதவி இயக்குனர் திருமலைவாசன் துறையில் செயல்படும் திட்டங்கள் குறித்து விளக்கினார். வேளாண்மை அலுவலர்கள் ராஜலெட்சுமி, விமலா , ராமகிருஷ்ணன் பங்கேற்றனர்.

**விளை பொருட்கள் வீணாவதை தடுக்க ஏற்றுமதியில் கவனம் தேவை :**

கோவை:வேளாண் பொருள் ஏற்றுமதி மூலம், விவசாய விளை பொருட்கள் வீணாவது தடுக்கப்படும். பதனிடும் தொழிற்சாலைகள் அமைப்பதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். நாட்டுக்கு அதிக அன்னிய செலாவணி கிடைக்கும். விவசாயிகளின் வருவாயும் உயரும் என்பதால், வேளாண் பொருள் ஏற்றுமதியில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும்," என்று கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.கோவை வேளாண் பல்கலையில் நடந்த வேளாண் பொருள் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் பற்றிய கருத்தரங்கில், துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:

இந்தியாவின் 70 சதவீத மக்கள் விவசாயத்தையே நம்பியுள்ளனர். 1947ல் 50 மில்லியன் டன் ஆக இருந்த உணவு உற்பத்தி, 2008-2009ல் 234 மில்லியன் டன்னை கடந்துள்ளது. இதனால், ஒரு மனிதனுக்கு 395 கிராம் உணவே கிடைத்து வந்த நிலை மாறி, இன்று 438 கிராம் உணவு உறுதி செய்யப்பட்டுள்ளது.தேயிலை, மிளகு, பால், முந்திரி ஆகியவற்றின் உற்பத்தியில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. 25 சதவீத மலர்களும், 10 சதவீத பழங்களும், 6 சதவீத காய்கறிகளும் தமிழகத்தில்தான் உற்பத்தி ஆகின்றன. விவசாய உற்பத்தியில் உலகளவில் நம் நாடு உயர்ந்த இடத்தில் இருந்தாலும், அதிக வருமானம் பெற்றுத் தரும் விவசாய பொருட்களின் ஏற்றுமதியில் இன்னும் சிறப்பான இடத்தை பிடிக்கவில்லை.

உலக ஏற்றுமதியில் இந்திய விவசாய பொருட்களின் ஏற்றுமதி மதிப்பு ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. வேளாண் ஏற்றுமதியை அதிகரித்தால், விவசாய தொழிலின் வருமானம் உயரும். நம் நாட்டில் பிரட், ஜாம், பழச்சாறு ஆகிய உணவுப் பொருட்களை பதப்படுத்தி உண்ணும் பழக்கம் குறைவு. உற்பத்தி செய்யப்படுவதில் ஆறு சதவீத உணவு தானியங்களும், 35 சதவீத பழம் மற்றும் காய்கறிகளும் வீணாகின்றன. இதனால் தானியப் பயிர்களில் 21 ஆயிரத்து

500 கோடி ரூபாயும், பழம் மற்றும் காய்கறிகளில் 45 ஆயிரம் கோடி ரூபாயும் வருவாய் இழப்பு ஏற்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, அனைத்து சிரமங்களையும் கடந்து அதிக விளைச்சலை எடுக்க பாடுபடும் விவசாயிக்கும் நல்ல வருமானம் கிடைப்பது இல்லை. இன்று விவசாயிகளில் 40 சதவீதத்தினர் வேறு நல்ல வேலை கிடைத்தால் விவசாயத் தொழிலை விட்டு விடத் தயாராக உள்ளனர் என புள்ளி விபரம் கூறுகிறது. ஒரு புறம் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்து வீணடிக்கப்படுகிறது. மற்றொரு புறம், விளைவித்த பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. விவசாய பொருட்களை அதிகளவில் பதப்படுத்தி உலகச் சந்தையில் ஏற்றுமதி செய்வதுதான் இந்த இரு அவல நிலைகளுக்கும் தீர்வு.

இதன் மூலம் விவசாய விளைப் பொருட்கள் வீணாவது தடுக்கப்படும். பதனிடும் தொழிற்சாலைகள் அமைப்பதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். நாட்டுக்கு அதிக அன்னிய செலாவணி கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைத்து, அவர்களின் பொருளாதார நிலைமை மேம்படும். விவசாயத்தை விட்டு வேறு தொழிலுக்கு சென்று விட்டவர்களும் மீண்டும் விவசாய தொழிலுக்கு திரும்பும் வாய்ப்பு உருவாகும்.

துணைவேந்தர் முருகேசபூபதி பேசுகையில்,அமெரிக்காவில் 65 சதவீதமும், பிரான்ஸ், பிரேசில் நாடுகளில் 70 சதவீதமும், பிலிப்பைன்ஸ் நாட்டில் 78 சதவீதமும், மலேசிய நாட்டில் 83 சதவீதமும் பழம் மற்றும் காய்கறிகள் பதப்படுத்தப்படுகின்றன. அங்கு இவ்வாறு பதப்படுத்தப்பட்ட உணவையே அதிகமாக சாப்பிடுகின்றனர். உலகின் 10 சதவீத பழங்கள் மற்றும் காய்கறிகள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டாலும், வெறும் இரண்டு சதவீதம் மட்டுமே பதனிடப்படுகிறது. இதனால் உணவுப் பொருட்கள் பெருமளவில் சேதம் அடைகிறது.

இவற்றை பதப்படுத்தி ஏற்றுமதி செய்தால் நல்ல லாபம் பெறலாம்," என்றார்.இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.ஏராளமான ஏற்றுமதியாளர்கள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயத்துக்கு ரூ. 4,000 கோடி "நபார்டு' வங்கி அதிகாரி தகவல்**

அன்னூர் : "விவசாய வளர்ச்சி திட்டங்களுக்கு 4,000 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது' என, நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் தெரிவித்தார்.நபார்டு வங்கி, யூனியன் பாங்க் ஆப் இந்தியா, அவினாசிலிங்கம் வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவற்றின்

சார்பில், அக்கரை செங்கப்பள்ளி ஊராட்சி, தொட்டிபாளையத்தில் முல்லை உழவர் மன்றம் துவக்க விழா நடந்தது.

கோவை அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் உதவி நிர்வாக அறங்காவலர் மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்து பேசியதாவது:விவசாயத்துக்கு இப்போது முக்கியத்துவம் இல்லாமல் நலிந்து பின்னோக்கி தள்ளப்படுகிறது. நாடு சுதந்திரம் பெற்றபோது இருந்த விவசாய வளத்துடன் மக்கள்தொகையை ஒப்பிட்டு பார்த்தால், தற்போது விவசாய வளமும் குறைந்து விட்டது. விவசாயிகளும் குறைந்து விட்டனர். மக்கள்தொகை நான்கு மடங்கு அதிகரித்து விட்டது.

மக்கள்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப வேளாண் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். விவசாயிகளை ஊக்குவிக்க நாடு முழுவதும் உழவர் மன்றங்கள் துவக்கப்படுகின்றன. விவசாயிகளை ஒன்றிணைத்து செயல்படுத்த வேளாண் அறிவியல் நிலையமும், வங்கிகளும் பாடுபடுகின்றன. உழவர் மன்றத்துக்கு தேவையான நிதியை நபார்டு வங்கியும், புதிய தொழில்நுட்பங்களை வேளாண் அறிவியல் நிலையமும், அரசுதுறைகளும் தருகின்றன. இதை பயன்படுத்தி விவசாயிகள் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.இவ்வாறு, மீனாட்சி சுந்தரம் பேசினார்.

நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சுரேஷ் பேசுகையில்,""நபார்டு வங்கி விவசாய வளர்ச்சி திட்டங்களுக்கு 4,000 கோடி ரூபாய் நிதி அளித்து வருகிறது. சிறந்த உழவர் மன்றங்களுக்கு பரிசு வழங் கப்படும்," என்றார்.அவினாசிலிங்கம் கல்வி அறக் கட்டளையின் கூடுதல் இயக்குனர் லட்சுமி சாந்தா பேசுகையில்,""உழவர் மன்றங்களால் பல மாவட்டங்களில் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது," என்றார்.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் நந்தகோபால், யூனியன் பாங்க் ஆப் இந்தியா கிளை மேலாளர் சொர்ணமணி, ஊராட்சி ஒன்றிய தலைவர் ராதா, ஊராட்சி தலைவர் கோபாலன், ஒருங்கிணைப்பாளர் சுகந்தி ஆகியோர் பேசினர். வேளாண், தோட்டக்கலைத் துறை அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்றனர். தொழில்நுட்ப வல்லுனர்கள் நாகராஜ், ரவீந்திரன் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**விலைவாசி உயரவில்லை : இளங்கோவன் மழுப்பல்**

சின்னமனூர் : காங்., ஆளும் மாநிலங்களில் விலைகள் கட்டுப் பாட்டிற்குள் உள்ளது என விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த காங்., கட்சியிடம் கற்றுக்கொள்ள வேண்டும் என முன்னாள் மத்திய அமைச்சர் இளங்கோவன் பேசினார். சின்னமனூரில் காங்., சார்பில் காமராஜர் சிலை

திறப்பு விழா மற்றும் பொதுக்கூட்டம் தேனி முன்னாள் எம்.எல்.ஏ., அழகர்ராஜா தலைமையில் நடந்தது. எம்.பி.,க்கள் ஆரூண், மாணிக்தாக்கூர் முன்னிலை வகித்தனர்.

காமராஜர் சிலையை திறந்து வைத்து முன்னாள் மத்திய அமைச்சர் இளங் கோவன் பேசியதாவது: காங்., கட்சியில் கோஷ்டி பூசல் முடிவுக்கு வந்து விட்டது. இம்மாதம் திருப்பூரில் ஜூலை 31ம் தேதி நடைபெறவுள்ள காமராஜர் சிலை திறப்பு விழாவில் சிதம்பரம், வாசன், தங்கபாலு உட்பட அனைத்து தலைவர்களும் பங்கேற்கின்றனர்.

தமிழகத்தில் தற்போது செயல்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களுக்கும் மத்திய அரசே காரணம். காங்., ஆளும் மாநிலங்களில் விலைவாசி கட்டுப் பாட்டிற்குள் உள்ளது. விலைகளை கட்டுப்படுத்துவது குறித்து மற்றவர்கள் காங்., கட்சியிடம் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு பேசினார்.

**இலவசமாக மக்காச் சோள விதைகள்**

கம்பம் : கம்பம் விவசாய உதவி இயக்குநர் (பொறுப்பு) ராமராஜ் கூறுகையில் "கம்பம் பகுதியில் புதிய ரக மக்காச்சோளம் மாதிரி திடல் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக 50 விவசாயிகளுக்கு தலா 2 கிலோ வீதம் இலவசமாக மக்காச்சோள விதைகள் வழங்கப்படுகிறது. விதைகளை இலவசமாக பெற விவசாயிகள் தங்களின் நிலங்களில் உள்ள மண்ணை பரிசோதனை செய்து, அதற்கான முடிவுகளை காண்பிக்க வேண் டும். விருப்பம் உள்ள விவசாயிகள் மண் பரிசோதனை விதைகளை பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

**நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழை அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

ஊட்டி : நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், பகல் நேரங்களிலேயே கடும் குளிர் வாட்டுகிறது; நீர் வரத்து அதிகரித்து வருவதால் அணைகளில் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.நீலகிரியில் தென்மேற்கு பருவ மழை தாமதமாக பெய்ய துவங்கினாலும், கடந்த சில நாட்களாக தீவிரமாக பெய்து வருகிறது. பகல் நேரங்களிலும் கடும் பனிமூட்டத்துடன் மழை பெய்து வருகிறது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையால் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.கடந்த ஜூன் மாதம் வங்கக் கடலில் புயல் சின்னம் ஏற்பட்ட போது மட்டுமே, நீலகிரி மாவட்டத்தில் மழை பெய்தது. அதன்பின், குறிப்பிடும்படியான மழைப்பொழிவு இல்லை. இதனால் மின் உற்பத்தியில் சிக்கல் நிலவியது; விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர்.ஆனால் ஆடி மாதம் துவங்கியதில் இருந்து காலநிலையில் மாற்றம் ஏற்பட்டது. ஊட்டி, குன்னூர், கூடலூர், கோத்தகிரி பகுதிகளில் காற்றுடன் தொடர் மழை பெய்கிறது. மழையுடன் கடுமையான குளிரும், சில நாட்களாக மாவட்ட மக்களை வாட்டுகிறது.நீலகிரி

மாவட்டத்தில், மின் உற்பத்திக்கும், மக்களின் நீர் தேவைக்கும் பயன்படும் 13 அணைகளின் மட்டம், நீர் பிடிப்பு பகுதிகளிலிருந்து வரும் நீரால் உயர துவங்கியுள்ளது. இதன் மூலம், இம்மாவட்ட விவசாயிகளுக்கும், சமவெளிப் பகுதி மக்களுக்கும், போதிய நீர் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. மின் உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**மரக்கன்றுகள், மலர் நாற்றுகள் விற்பனை: அழைக்குது தோட்டக்கலை**

ஊட்டி : விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விவசாயப் பயிர், மரக் கன்றுகள், மலர் நாற்றுக்களை வாங்கி பயன்பெற அழைப்பு விடப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்ட அரசு தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் (பொ) தேவராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நீலகிரியில் பருவமழை துவங்கியது, விவசாயத்துக்கு ஏற்றப் பருவமாக உள்ளது. மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலைத் துறைப் பூங்கா, பண்ணைகளில் நாற்றுக்கள், செடிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.பர்லியார் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், கிராம்பு, ஜாதிக்காய், பாக்கு, சில்வர் ஓக், காபி, துரியன், இலவங்கப் பட்டை, ரோஸ் ஆப்பிள், மணிபிளான்ட், குரோட்டன்ஸ், காட்டேரி அரசு தோட்டக்கலைப் பண்ணையில், ரோஸ்மேரி, ரோஜா மொட்டு செடிகள், அழகு தாவரங்கள், எலுமிச்சை, சில்வர் ஓக், மரக்கன்றுகள், குன்னூர் பழவியல் நிலையத்தில், பிளம்ஸ், பீச், பேரி, ஆப்பிள், மாதுளம், குன்னூர் பழம் பதனிடும் நிலையத்தில், ஜாம், ஜெல்லி, பழரசம், ஊறுகாய் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.குன்னூர் சிம்ஸ் பூங்காவில், சாம்பிராணி, போடோ கார்பஸ் உட்பட மரக்கன்றுகள், அழகு தாவரங்கள், மலர் விதைகள், ஊட்டி ரோஜாப் பூங்காவில், சாம்பிராணி, மருத்துவச் செடிகள், ஊட்டி தாவரவியல் பூங்காவில், ரோஜா செடிகள், அழகு தாவரங்கள், கேக்டஸ் ரகங்கள், மலர் விதைகள், ஊட்டி சேரிங்கிராஸ் தோட்டக்கலை வணிக வளாகத்தில், ஜாம், ஜெல்லி, பழரசம், ஊறுகாய் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தொட்டபெட்டா தோட்டக்கலைப் பண்ணையில், தேயிலை நாற்றுகள், தும்மனட்டி தோட்டக்கலைப் பண்ணை, ஊட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வேளாண் கிடங்கில், அர்கா கோமல் பீன்ஸ் விதைகள், நஞ்சநாடு தோட்டக்கலைப் பண்ணையில், உருளைக்கிழங்கு விதைகள், கோல்கிரைன் பண்ணையில், உருளைக்கிழங்கு, தேயிலை நாற்றுகள், தேவாலா பண்ணையில், சில்வர் ஓக், காபி, பாக்கு, தேயிலை, மிளகு நாற்றுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள், விவசாயிகள் வாங்கி நடவு செய்து பயன்பெறலாம். விபரங்களுக்கு, அந்தந்தப் பண்ணை மேலாளரை நேரில் அணுகி தெரிந்துக் கொள்ளலாம்.இவ்வாறு, இணை இயக்குனர் தேவராஜ் கூறியுள்ளார்.

**தரமான தேயிலைக்கு குறையவில்லை மவுசு ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு கூடுதல் விலை**

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விலை சரிவு தொடர்ந்தாலும், தரமான தேயிலைக்கு மவுசு குறையவில்லை; ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு கூடுதல் விலை கிடைத்தது.குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 29க்கான ஏலம் நடத்தப்பட்டது; 17.83 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக இருந்தது; இலை ரகம் 12.10 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.73 லட்சம் கிலோ அடங்கும். உள்நாட்டு வர்த்தகத்தை பொறுத்தவரை, வழக்கமாக பங்கேற்கும் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், பஞ்சாப் மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு, இந்த வாரமும் குறைவாகவே இருந்தது.ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை, பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு திருப்தியளிப்பதாக இருந்தது; விற்பனை களைகட்டவில்லை. தரமான தேயிலைத் தூளை உள்நாட்டு, ஏற்றுமதி வர்த்தகர்கள் கூடுதல் விலை கொடுத்து வாங்கினர்.

சாதாரண ரக தூளின் விலை, கிலோவுக்கு 2 ரூபாய் குறைந்தது; சிறந்த ரகத்தின் விலை, கிலோவுக்கு 2 ரூபாய் அதிகரித்தது. விற்பனைக்கு வந்ததில் 25 சதவீதம் தேங்கியது.சி.டி.சி., ரகத்தில், தர்மோனா தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு, கிலோவுக்கு அதிகபட்சம் 152 ரூபாய் விலை கிடைத்தது; 50க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்தோடக்ஸ் ரகத்தில், சாம்ராஜ் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 250 ரூபாய் விலை கிடைத்தது; 18க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.விலை நிலவரத்தை பொறுத்தவரை, இலை ரகத்தில், சாதாரண ரகத்தின் விலை 34-39 ரூபாய், சிறந்த ரகத்தின் விலை 80-125 ரூபாயாக இருந்தது; டஸ்ட் ரகத்தில், சாதாரண ரகத்தின் விலை 34-40, சிறந்த ரகத்தின் விலை 90-140 ரூபாயாக இருந்தது.விற்பனை எண் 30க்கான ஏலம், வரும் 29,30ம் தேதிகளில் நடத்தப்படுகிறது; 16.92 லட்சம் கிலோ தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது; இலை ரகம் 11.51 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.41 லட்சம் கிலோவும் அடங்கும். இது, கடந்த ஏலத்தை விட 1.91 லட்சம் கிலோ அதிகம்.

**பாபநாசம், மணிமுத்தூறு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கும் முன்பு விவசாயிகளிடம் ஆலோசனை**

தூத்துக்குடி : பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் முன் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குழுவில் ஆலோசிக்கப்படும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் பிரகாஷ் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பிரகாஷ் தலைமையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நாகராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் தனசிங் டேவிட், உதவி இயக்குநர் பாலசிங் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பல்வேறு விவசாய சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்தும் விவசாய சங்க நிர்வாகிகள் கேள்வி எழுப்பினர். கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி மைய விவசாய அதிகாரி செல்வம் நவீன விவசாய தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு சிலேடு மூலம் விளக்கம் அளித்தார்.எட்டயபுரம் தாலுகா பகுதிக்குள் விளாத்திகுளம், கோவில்பட்டி, புதூர் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பகுதிகள் இருக்கிறது. எட்டயபுரம் தாலுகா பகுதியை சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் தங்களுக்கு வேண்டிய அரசு உதவிகள் பெறுவதற்கும், பிற காரியங்களுக்கும் மூன்று பகுதிக்கும் அலைய வேண்டியுள்ளது.

இதனால் எட்டயபுரத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி ரெங்கசாமி கேட்டார். இது குறித் அரசுக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் கூறினார்.

இதே போல் கோவில்பட்டி வேளாண்மை ஆரா ய்ச்சி நிலையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். குரும்பூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி தமிழ்மணி கூறினார். உடனடியாக இதற்கான கோப் பை தயார் செய்யுமாறு நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

புதியம்புத்தூர் பகுதியில் லாரிகளில் அதிகமாக தண்ணீர் உறிஞ்சு எடுத்து செல்வது மக்கள் எதிர்ப்பால் நின்று விட்டது. ஓட்டப்பிடாரம் பகுதியில் இதுபோன்று முழுமையாக தண்ணீர் லாரிகளில் எடுத்து செல்வதை நிறுத்த வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி அழகு தெரிவித்தார். இது சம்பந்தமான வழக்கு கோர்ட்டில் உள்ளதால், மாவட்ட நிர்வாகம் கோர்ட் தீர்ப்பு குறித்து மேல் முறையீடு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து வருவதாக கலெக்டர் பிரகாஷ் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் பாங்குகளில் கல்வி கடன் வழங்குவது சம்பந்தமான கேள்விக்கு பதில் அளித்த கலெக்டர் எந்த பாங்குகளில் ஊரக பகுதியில் உள்ளவர்கள் கடன் வாங்கலாம் என்பது குறித்து தெளிவான பாங்க் லிஸ்ட் விரைவில் பத்திரிக்கை வாயிலாக தெரிவிக்கப்படும் என்றார்.

சாகுபடிக்கு தண்ணீர் வழங்குவதில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள் பாகுபாடு காட்டுவதாக விவசாய சங்க நிர்வாகிகள் நயினார்குலசேகரன், ராஜேந்திரன்,

வேலுமயில், நிக்கோலஸ் மற்றும் பலர் புகார் கூறினர். அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நாகராஜன் தெரிவித்தார். ஆனால் இதனை நயினார்குலசேகரன் ஏற்றுக் கொள்ளவில்லை. இதில் குளறுபடி இருப்பதாக குறிப்பிட்டார். அரசின் உத்தரவு இருந்தாலும் அணையில் தண்ணீர் இருந்தால் தான் வழங்க முடியும். தற்போது நல்ல மழை பெய்து வருவதால் பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் தண்ணீர் அதிகரித்து வருகிறது. இதனால் இது சம்பந்தமான பிரச்னை தீர வாய்ப்பு ஏற்படும் என்று கலெக்டர் கூறினார்.

கீழக்கால், மேலக்கால் பகுதிக்கு தண்ணீர் திறப்பதில் தொடர்ந்து பாரபட்சம் காட்டப்படுகிறது. நீர் பங்கீடு முறையில் பொதுப்பணித்துறை முறையாக நடக்கவில்லை என்று விவசாயிகள் தொடர்ந்து புகார் கூறினர்.

இனிமேல் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதற்கு முன்பாக விவசாய சங்க நிர்வாகிகள் அடங்கிய குழுவில் ஆலோசனை செய்த பிறகு அணைத் தண்ணீர் திறக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார். கலெக்டரின் முடிவிற்கு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் சத்தியமூர்த்தி, மத்திய கூட்டுறவு பாங்க் தனி அதிகாரி செந்தமிழ்செல்வி, அரசு போக்குவரத்துகழக கோட்ட மேலாளர் கண்ணபிரான், வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குநர் முருகானந்தம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஜோசப்கருணாநிதி, வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அமுதன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் நிர்மல்கிறிஸ்துதாஸ், மாசுகட்டுப்பாடு வாரிய பொறியாளர் முருகன், பி.ஆர்.ஓ பாலசக்திதாசன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் திருப்பணிச்செட்டிகுளம் ஊராட்சி தலைவர் சுயம்புலிங்கம் தமிழக அரசின் உத்தமர் காந்தி விருதினை துணை முதல்வர் ஸ்டாலினிடம் பெற்று வந்துள்ளார். விருது பெற்ற ஊராட்சி தலைவரை கலெக்டர் பொன்னாடை அணிவித்து பாராட்டினார். ஊராட்சிகளின் உதவி இயக்குநர் அம்மையப்பன், ஸ்ரீவைகுண்டம் பி.டி.ஓ வீரபாகு ஆகியோர் உடனிருந்தனர்.

**எம்.மீனாட்சிபுரம் கூட்டுறவு சங்கம் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு கடன் வழங்கும் விழா**

தூத்துக்குடி : கோவில்பட்டியில் நடந்த வியாபார மேம்பாட்டுத் திட்ட கூட்டத்தில் எம்.மீனாட்சிபுரம் கூட்டுறவு கடன் சங்கம் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு கடன் வழங்கியது.

கோவில்பட்டியில் வைத்து நடந்த வியாபார மேம்பாட்டுத் திட்ட கூட்டத்தில் வைத்து எம்.மீனாட்சிபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதற்கு, கடன்தொகை ரூ.40 ஆயிரத்து 186க்கான காசோலையை தூத்துக்குடி மாவ ட்ட மத்திய கூட்டுறவு பாங்க் தனி அலுவலர் செந்தமிழ்செல்வி பயனாளி ஜெயசங்கரிடம் வழங்கினார்.

பயனாளி ஜெயசங்கர் 2 1/2 ஏக்கரில் கரும்பு பயிரிட்டுள் ளார். இதில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கும் பொருட்டு இக்கடனை பெற்றுள்ளார். நிக ழ்ச்சியில் மத்திய கூட்டுறவு பாங்க் முதன்மை வருவாய் அலுவலர் சக்திவேல் முருகன், கோவில்பட்டி துணைப்பதிவாளர் அலுவலக கூட்டுறவு சார்பதிவாளர் ஜெயசீலன், சங்கத் தனிஅலுவலர் முத்துசாமி, செயலர் மாரிமுத்து மற்றும் திருநெல்வேலி ஜெயின் இரிகேசன் சிஸ்டம்ஸ் மேலாண்மை இயக்குநர் ராஜேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இத்தகவலை தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ஞானதுரை தெரிவித்தார்.

**மானிய விலையில் நெல் விதை: வேளாண் அதிகாரி அறிவிப்பு**

ஜெயங்கொண்டம்: "ஜெயங்கொண்டத்தில் மானிய விலையில் நெல் விதை வழங்கப்படுகிறது' என்று ஜெயங்கொண்டம் வேளாண்மை உதவி இயக்குனர் பழனிசாமி கூறினார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: ஜெயங்கொண்டம் வட்டாரத்தி ல் 5,000 ஏக்கரில் இறவை நெல்சாகுபடி செய்யப்படுகிறது. விø த கிராம திட்டத்தின் கீழ் ஜெயங்கொண்டம், மீன்சுருட்டி வேளா ண் விரிவாக்க மையங்களில் சா வித்திரி என்ற சி.ஆர். 1009, நெல் சான்று விதை கோ 43, ஜெயங்கொண்டம் வேளாண் வி ரிவாக்க மையத்தில் பிபிடி 5204 என்ற ஆ ந்திரா பொன்னியும், ஒரு விவசாயிக்கு 20 கிலோ வீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. நெல் சாகுபடிக்கு தேவை ப்படும் நன்னியூர் பாக்கெட், நெல்நுண்சத்துகள் வழங்கப்படுகின்றன. மானிய விலையில் நெல் வி தைகள் பெற்று பயனடையலாம்.

**கொத்தமல்லிக்கு விலை இல்லை விவசாயிகள் வேதனை**

உடுமலை : பல மாதங்களாகியும் கொத்தமல்லிக்கு விலை கிடைக்காமல், தொடர்ந்து சரிந்து வருவதால் இருப்பு வைத்த விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.குடிமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பருவமழையை ஆதாரமாக கொண்டு மானாவாரியாக கொத்தமல்லி அதிகளவு பயிரிடப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் அறுவடை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அறுவடை சீசனில் கொத்தமல்லி கிலோ ரூ.40 கொள்முதல் செய்யப்பட்டது.விளைச்சல் குறைவு மற்றும்

சாகுபடி செலவு அதிகரிப்பால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கட்டுபடியாகும் விலை கிடைக்கும் வரை கொத்தமல்லியை இருப்பு வைக்க ஆர்வம் காட்டினர்.

விளைநிலங்களிலும், ஒழுங்கு முறை விற்பனை கூட குடோன்களிலும் கொத்தமல்லி இருப்பு வைக்கப்பட்டது. இருப்பு வைத்து பல மாதங்களாகியும் கொத்தமல்லியின் விலை அதிகரிக்கவில்லை. இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக விலை தொடர்ந்து குறைந்து வருகிறது.தற்போது கிலோ 37 ரூபாயாக விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். உடுமலை மற்றும் பெதப்பம்பட்டி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் மட்டும் 500க்கும் அதிகமான கொத்தமல்லி மூட்டைகள் விற்பனை செய்யப்படாமல் உள்ளன.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "கடந்த சீசனில் கொத்தமல்லி பயிரிட்ட போது போதிய மழை இல்லாமல் சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் விளைச்சல் குறைந்ததால் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருப்பு வைத்தோம்.நேர்மாறாக பல மாதங்களாகியும் விலை அதிகரிக்காமல் சரிந்து வருகிறது. விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க உணவுப்பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இப்பகுதியில் கொத்தமல்லியை நேரடியாக கொள்முதல் செய்ய வேளாண் விற்பனை வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

---

தினத் தந்தி

## *நடப்பு பருவத்தில் நெல் பயிரிடும் பரப்பளவு 8 சதவீதம் அதிகரிப்பு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நாடு முழுவதும் பருவமழை ஓரளவிற்கு நன்றாக உள்ளது. இதனையடுத்து, நடப்பு ஆண்டில், கரீப் பருவத்தில், நெல், பருப்பு வகைகள் மற்றும் பருத்தி பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு, சென்ற ஆண்டின் கரீப் பருவத்தைக் காட்டிலும் சிறப்பான அளவில்*

*அதிகரித்துள்ளது.*
*நடப்பு பருவத்தில், இதுவரை 1.70 கோடி ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 7.6 சதவீதம் (1.58 கோடி ஹெக்டேர்) அதிகமாகும்.*
*பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்பளவு 12 சதவீதம் அதிகரித்து 51 லட்சம் ஹெக்டேரிலிருந்து 57 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. துவரம் பருப்பு பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு 23 சதவீதம் அதிகரித்து 22 லட்சம் ஹெக்டேரிலிருந்து 27 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. பருத்தி சாகுபடி 81 லட்சம் ஹெக்டேரிலிருந்து 95 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.*

## *குன்னூர் ஏல மையத்தில் 25 சதவீத தேயிலை தூள் தேக்கம்*

*குன்னூர், ஜூலை.26–*
*குன்னூர் ஏல மையத்தில் 25 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*
*தேயிலை ஏலம்*
*குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏல மையத்தில் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகின்றனர்.*
*விற்பனை எண் 29–க்கான தேயிலை ஏலம் கடந்த 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 17 லட்சத்து 83 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 12 லட்சத்து 10 ஆயிரம் கிலோ இலை ரகமும், 5 லட்சத்து 73 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.*
*25 சதவீதம் தேக்கம்*
*தேயிலை ஏலத்தை பொறுத்த வரை தரமான தேயிலை தூளுக்கு கிராக்கி இருந்தது. இதனால் தரமான தேயிலை தூளுக்கு ரூ.2 அதிகமாக கேட்கப்பட்டது. சாதாரண வகை தேயிலை தூளுக்கு ரூ.2 விலை குறைந்தது.*
*ஏற்றுமதியாளர்களை பொறுத்த வரை ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய 2 நாட்டு வர்த்தகர்களும் ஓரளவு தரமான தேயிலை தூளை வாங்கினர். ஆனால் ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகம் களை கட்டவில்லை. இதனால் மொத்த தேயிலை வரத்தில் 25 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*
*12 தொழிற்சாலைகள்*
*சி.டி.சி.ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை ரூ.152 ஆக இருந்தது. 50 தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை தூள் ரூ.100க்கு விற்பனையானது. கம்பெனி தேயிலை எஸ்டேட்டுகள் தயாரிக்கும் ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் உயர்ந்தபட்ச விலை ரூ.250 ஆக இருந்தது. 12 தொழிற்சாலைகள் ரூ.100க்கு மேல் விற்பனை செய்தன.*
*தேயிலையின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகைக்கு ரூ.34 முதல் ரூ.39 வரையிலும், உயர்விலை தேயிலை தூள் ரூ.80–ல் இருந்து ரூ.125 வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.34–ல் இருந்து ரூ.40 வரையிலும்*

*உயர்விலை தேயிலை தூள் ரூ.90–ல் இருந்து ரூ.140 வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண்30–க்கான தேயிலை ஏலம் வருகிற 29, 30 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்துக்கு மொத்தம் 16 லட்சத்து 92 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*